**தலைப்பு 24 – தேசிய கொள்வனவு ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தேசிய கொள்வனவு ஆணைக்குழு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்கள் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொதுக் கட்டுப்பாட்டு நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 24 தேசிய கொள்வனவு ஆணைக்குழு 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைமை செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய கொள்வனவு ஆணைக்குழு கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 12 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கு நடவடிக்கைகளின் தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரால் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பந்தி தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தலில் குறைபாடு<br>2. எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் பெறப்படாமை | 2.1(அ), (ஆ)<br>2.2(அ),(ஆ) |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசிக் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள | 2.9 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றல்

**திட்டமிடல்**

பெறுகைகள் ஆணைக்குழுவின் மூலமாக 2016, 2017 மற்றும் மீளாய்வாண்டு ஆகிய மூன்று ஆண்டுகளுக்குரிய தயார்படுத்தப்பட்டிருந்த செயற்பாட்டுத் திட்டத்தில் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைபாடுகள் தெரியவந்தது.

(i) குறித்த ஆண்டிற்கான நாளது வரையாக்கப்பட்ட சபையின் வியூகம், அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையாற்றிக் கொண்டிருக்கும் பதவியணியினர் சம்பந்தமான விபரங்கள் செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) வருடாந்த செயற்பாடுகளுக்காக கட்டுநிதி தேவைகள் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் முன்னேற்றம் மற்றும் பரப்புதல் போதுமானளவு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

கீழ் குறிப்பிடப்பட்டவைகள் அவதானிக்கப்பட்டன.

(அ)

(i) 2006 ஆம் ஆண்டிலே வெளியிடப்பட்ட பெறுகைகள் வழிகாட்டல் கோவையை திருத்தம் செய்து புதிய பெறுகைகள் வழிகாட்டல் கோவை 2017 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிற்குள் சமர்ப்பிப்பதற்கு பெறுகைகள் ஆணைக்குழு திட்டமிட்டிருந்தது. அதன்படி புதிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2018 மே 09 ஆந் திகதியிட்ட அரச வர்த்தமானி 2017/15 ஆம் இலக்கத்தின் மூலம் வெளியிடப்பட்டிருந்தாலும் 2018 ஜூலை 31 ஆந் திகதியாகியும் அது பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்று பலப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் ஆணைக்குழுவை நிறுவுவதன் முக்கிய நோக்கம் நிறைவேற்றப்படுதல் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

(ii) அரச பிரிவிலே பெறுகைகள் சம்பந்தமாக மனுதாரரினால் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறைகளை பரீட்சிக்கும் போது, ஆணைக்குழுவிற்கு 2017 ஆம் ஆண்டிலே 114 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியில் 73 முறைப்பாடுகள் முடிவடைந்திருந்தது. இதன்படி 41 முறைப்பாடுகள் பரிசீலனை மட்டத்தில் காணப்படுவதுடன் போதுமானளவு உத்தியோகத்தர் எண்ணிக்கை இல்லாததன் காரணமாக இந்த காரியத்திற்காக ஒரு உத்தியோகத்தரை மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

(ஆ) செயற்பாட்டுத் திட்டத்தின் பிரதான விடயமான இணையதளம் மற்றும் இலத்திரணியல் அரச பெறுகைகள் கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ் காணப்படும் தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் விடய பரப்பிற்கு உட்பட்ட அரச பெறுகைகள் நடைமுறைகளை பின் தொடர்வதற்காக இணையதளம் நிர்மாணித்தல் 2017 ஆம் ஆண்டில் முதலாவது காலாண்டுக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் அதை செய்வதற்கு முடியாது போயிருந்தது. போதுமானளவு பதவியணியினர் இல்லாமை

எதிர்பார்த்த முறையில் வெளிநாட்டு நிதியினை வழங்குகின்ற நிறுவனங்களின் மூலம் நிதியினை பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற காரணங்களினால் அந்த இணையத்தளத்தை நிர்மாணிப்பதற்கு முடியாமல் போனதாக ஆணைக்குழு கூறியிருந்தது.

**2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை.**

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் சபையினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கு உரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமெனினும், அந்த அறிக்கை 2018 ஜுலை 31 ஆந் திகதியாகியும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 பெறுகைகள் நடைமுறையின் ஊடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

ஆணைக்குழுவினால் அரச பெறுகைகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 5.3 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4.20 மில்லியன் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் ரூபா 1.10 மில்லியன் ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் 20.76 சதவீதம் ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.5 சொத்து முகாமைத்துவம்**

**வாகன பயன்பாடு**

ஆணைக்குழுவிற்கு மீளாய்வாண்டு இறுதியாகும் போது கீழ் காணப்படும் வகையில் ஒரு வாகனம் காணப்பட்டதுடன் அந்த வாகனத்தில் 7,247 கிலோ மீற்றர் இயக்கப்பட்டிருந்தது. எரிபொருள் மற்றும் எண்ணெய்க்காக ரூபா 345,600 வும் வாகன சேவையிடுவதற்காக ரூபா 32,555 வும் வாகன காப்புறுதிக்காக ரூபா 119,498 வுமாக மொத்தமாக ரூபா 497,653 செலவிடப்பட்டிருந்தது. இதன்படி, ஆணைக்குழுவினால் வாகன இயக்கத்திற்காக சாரதி சம்பளம் மற்றும் கொடுப்பனவு தவிர்ந்த ஒரு கிலோ மீற்றருக்காக ரூபா 69 செலவிடப்பட்டிருந்தது.

| வாகனங்களின் வகை | வாகனங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஏனைய செலவினம் | ஓட்டத்தில் ஈடுபடுத்திய கிலோமீற்றர் | ஓட்டத்தில் ஈடுபடுத்திய கிலோ மீற்றருக்கான கிரயம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | | ரூபா |
| Nissan | 01 | 8,125,000 | 497,653 | 7247 | 69 |

**2.6 நிலைபேறான அபிவிருத்தி**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டியிருப்பினும் தேசிய பெறுகைகள் ஆணைக்குழு தமது வரைபெல்லைக்கு உட்பட்ட விடயம் சம்பந்தமாக அந்த காரியங்கள் சம்பந்தமான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்களில் இலக்கின் அடிப்படையில் அடையப்பட்டவைகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கும் மீளாய்வாண்டிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குள் ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2017 | மீண்டெழுபவை | 43.56 | 41.40 | 2.16 | 4.96 |
| | மூலதனம் | 6.50 | 5.36 | 1.14 | 17.5 |
| | மொத்தம் | **50.06** | **46.76** | **3.30** | **6.59** |

2016 ஆம் ஆண்டில் தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவிற்காக நிதி ஏற்பாடு ஜனாதிபதி செயலாளர் செலவு விடய இலக்கத்தின் கீழ் ரூபா 25.97 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 19.92 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிலே வேறான செலவு தலைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக கீழ் காணப்படும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

(i) செலவு விடயத்திற்காக ஏற்படுத்தியிருந்த ரூபா 500,000 முழு தேறிய ஏற்பாட்டினையும் எதையும் உபயோகப்படுத்தாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) செலவு விடயம் 06 இன் தேறிய ஏற்பாட்டின் மொத்தமான ரூபா 3,650,000 வில் சேமிப்பின் மொத்தம் ரூபா 1,193,674 ஆக இருந்ததுடன், சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் 18 சதவீதத்திலிருந்து 89 சதவீதம் வரையான வீச்சில் உள்ளது.

(iii) 2017 திசெம்பர் 13 ஆம் திகதிய 259/2017 ஆம் இலக்கமுடைய அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவு விடயத்திற்கு உரிய சொத்து வகைப்படுத்தலின் போது ஒவ்வொரு சொத்து வகையின் கீழ் வெவ்வேறாக சொத்து வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் மற்றும் 2102 மற்றும் 2103 ஆகிய செலவு விடயங்களுக்குரிய ஆரம்ப மீதி மற்றும் 2017 ஆம் ஆண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்ட உரிய சொத்துக்கள் அப்படி வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 கட்டுநிதிக் கணக்கு**

மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த கட்டுநிதி மதிப்பீட்டின்படி மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதி மாதாந்தம் விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டுநிதி சம்பந்தமான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பிக்க வேண்டிய கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி | கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பித்த கட்டுநிதிக்கிடையிலான வேறுபாடு | விண்ணப்பித்த கட்டநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 2.84 | 2.84 | 2.00 | - | 0.84 |
| பெப்ரவரி | 8.56 | 8.56 | 6.59 | - | 1.97 |
| மார்ச் | 5.22 | 5.22 | 4.90 | - | 0.32 |
| ஏப்ரல் | 3.09 | 3.09 | 1.69 | - | 1.40 |
| மே | 3.31 | 3.31 | 2.60 | - | 0.71 |
| யூன் | 3.22 | 3.22 | 2.58 | - | 0.64 |
| யூலை | 4.09 | 4.09 | 2.68 | - | 1.41 |
| ஆகஸ்ட் | 5.00 | 5.00 | 5.53 | - | (0.53) |
| செப்தம்பர் | 5.61 | 5.61 | 5.59 | - | 0.02 |
| ஒக்தோபர் | 3.09 | 3.09 | 2.39 | - | 0.70 |
| நவம்பர் | 3.79 | 3.79 | 3.40 | - | 0.39 |
| திசெம்பர் | 6.86 | 6.86 | 5.37 | - | 1.49 |
| **மொத்தம்** | **54.68** | **54.68** | **45.32** | **-** | **9.36** |

மீளாய்வாண்டிற்காக பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதி ரூபா 54.68 மில்லியன் ஆக இருந்ததுடன் பெறப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 45.32 மில்லியன் ஆக இருந்ததனால் விண்ணப்பிக்கப்பட்ட மற்றும் பெறப்பட்டிருந்த கட்டுநிதிகளுக்கிடையிலான வேறுபாடு ரூபா 9.3 மில்லியன் என்பதுடன் அது 17 சதவீதமாகும்.

### 2.9 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

2017 நவம்பர் 02 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்கமுடைய திறைசேரி செயல் நடவடிக்கை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2017 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு காசுப்புத்தகத்தை மூடுவதற்கு அமைச்சரவை செயலாளர்கள் திணைக்கள தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் மூலம் தமது காரியாலயம் மற்றும் உப காரியாலயங்களின் கணக்குகளை மூடுதல் உரிய பொறுப்பான ஊழிய உத்தியோகத்தருக்கு அந்த உத்தியோகத்தரின் பெயரில் அதிகாரத்தை வழங்க வேண்டியதுடன் அதற்கு உரிய பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பட வேண்டும்மெனினும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.10 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்வதற்கு உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாமை.

**2.11 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றுநிரூப முறைகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குள் ஆணைக்குழுவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**2.12 மனிதவள முகாமைத்துவம்**

2.12.1 **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளவாறான மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் ஆளணி வேதனங்களுக்கான செலவின தொகுதிக்காக ரூபா 12.68 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த நபரொருவருக்கான செலவினம் ரூபா. 667,368 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 08 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 17 | 06 | 11 |
| (iv) | ஆரம்ப நிலை | 09 | 04 | 05 |
| (v) | வேறு (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில்) | 12 | 01 | 11 |
| | மொத்தம் | 51 | 19 | 32 |

இது சம்பந்தமாக கீழ் வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியில் ஆணைக்குழு அனுமதித்திருந்த பதவியணியினரில் நிரந்தர சேவையாளர்களின் எண்ணிக்கை 39 ஆகவும் மற்றும் குத்தகையின் அடிப்படையில் 12 ஆகவும் காணப்பட்டது. குத்தகையின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படாமல் தற்காலிக அடிப்படையில் ஒரு பதவி மாத்திரம் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. அனுமதிக்கப்பட்டிருந்த நிரந்தர பதவிகள் 39 இல் 18 பதவிகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருந்தது. இவ்வாறு வெற்றிடங்கள் காணப்படுதல் சபையின் செயலாற்றலுக்கு குந்தகம் விளைவிக்குமளவிற்கு பாதிக்கின்றதா என்பதை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அனுமதிக்கப்பட்டிருந்த பதவியணியினரில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவில் குத்தகையின் அடிப்படையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கைக்குள் பெறுகைகள் உத்தியோகத்தர்கள் பதவிகள் 10 உம் தலைவரின் இணைப்புச் செயலாளர் பதவி ஒன்றும் மற்றும் தலைமைச் செயலாளரின் இணைப்புச் செயலாளர் பதவி ஒன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் குத்தகை அடிப்படையில் உள்ள பதவிகளுக்கு உரித்தாகாத தலைமை செயலாளர் பதவி, மேலதிக தலைமை செயலாளர் பதவிகள் 02, கணக்காளர் பதவி ஒன்று மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 05 என்பன குத்தகையின் அடிப்படையில் கீழ் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது.